# 'சிறுபான்மையினர் மனமகிழ்வுடன் இருக்க இன்னும் கூடுதல் நடவடிக்கை எடுக்கவும்' - சீன சமூகத்துக்கு அமைச்சர் வோங் வேண்டுகோள்

***Tamil Seithi***, 25th June 2021

சிங்கப்பூரில், சிறுபான்மையினர் மனமகிழ்வுடன் இருக்க இன்னும் கூடுதல் நடவடிக்கை எடுக்குமாறு பெரும்பான்மைச் சீனச் சமூகத்தினரை நிதியமைச்சர் லாரன்ஸ் வோங் (Lawrence Wong) கேட்டுக்கொண்டுள்ளார்.

சிறுபான்மையினரின் தேவைகளை உணர்ந்து புரிந்துநடந்துகொள்ளுமாறு அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இனம், இனவாதம் குறித்து கொள்கை ஆய்வுக் கழகம் ஏற்பாடு செய்த கருத்தரங்கில், திரு. வோங் உரையாற்றினார்.

சமூக ஊடகங்களில் அண்மையில் பரவிய சில இனவாதச் சம்பவங்கள் பற்றிய அக்கறைகள் குறித்தும் அவர் பேசினார்.

சிங்கப்பூர், இன நல்லிணக்கத்தை வலுப்படுத்துவதற்குரிய கொள்கைகளைத் தொடர்ந்து மேம்படுத்தும் என்று திரு. வோங் கூறினார்.

சமுதாயத்தின் போக்கு மாறிவரும் நிலையில், பரந்த அடிப்படையில் கலந்துபேசுவதும் தொடரவேண்டும் என்றார் அவர்.

நாட்டின் பல்லினக் கொள்கை முழுமையானதல்ல என்றபோதும் அது இன்றளவும் தனித்துவமானது என்று அவர் சொன்னார்.

சிங்கப்பூரில் பல்லினச் சமூகம் என்பது நம்முடைய இனம், மொழி, சமயம், கலாசாரம் ஆகிய அடையாளங்களை மறப்பதாகப் பொருள்படாது.

மற்ற இனங்களுக்கு மரியாதை கொடுப்பதோடு மரபை ஏற்றுக்கொள்ளும்போது அது தேசத்தின் அடையாளமாகவும் பொது நோக்கமாகவும் உருவாகிறது என்று திரு. வோங் கூறினார்.

சிங்கப்பூரில் இனவாதம் இருப்பதாகச் சொன்ன திரு. வோங், எந்தவித இனவாதச் செயல்களும் தெரிவிக்கப்பட வேண்டும் என்றார்.

பாரபட்சம், வருத்தம் ஆகியவற்றைப் பற்றிப் பொதுமக்கள் வெளிப்படையாகப் பேசவேண்டும் என்றும் அவை நியாயமாகக் கையாளப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சற்று நெருடலான கலந்துரையாடல்கள் நிகழும்போது, புரிந்துணர்வையும் சமரசத்தையும் மனத்திற்கொண்டு பொதுவான நிலைப்பாட்டைக் கண்டறிய முனைய வேண்டும் என்றார் அமைச்சர் வோங்.

சிறுபான்மையினராக இருப்பது சிரமமான ஒன்று என்பதைச் சமுதாயம் உணர வேண்டும்.

அதே நேரத்தில் பெரும்பான்மையினராக இருந்தாலும் அவர்களுக்கிடையிலும் வசதி, வாய்ப்புக் குறைந்தோர் இருப்பர் என்றும் திரு. வோங் குறிப்பிட்டார்.